

நேற்று முன்தினம் (03.01.2025) தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட 6 அணைகளுக்கான “சிறந்த அணை பராமரிப்பு” விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா.மன்மதன், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் தயாளகுமார் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி வார்டு எண் 24, ஆர்.கே.வி. நகரில் பூங்காவினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்து பார்வையிட்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் மனிஷ், துணை மேயர் வி.செல்வராஜ், மண்டல தலைவர் ப.க.பழனிசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஒன்றரை ஆண்டாகப் பற்றி எரியும்

# மணிப்பூருக்கு பிரதமர் செல்லாதது ஏன்?

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கேள்வி!

சென்னை, ஜன. 5 -

பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மணிப்பூரில் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறை சம்பவங்கள் பற்றி எரியும் நிலையில், பிரதமர் மோடி அங்கு செல்லாதது ஏன் என்று தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.



சென்னை ராஜா அண்ணா மலைபுரத்தில் உள்ள முத்தமிழ் பேரவை அரங்கில் சென்னை தென்மேற்கு தி.மு.க. சார்பில் மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் இளம் பெண்கள் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், பெண்கள் முன்னேற்றத்துக்கு ஏராளமான திட்டங்கள் நிறை வேற்றப்படுவதுதான் திராவிட மாடல் அரசின் சாதனை என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி, அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் காவல் துறை துரிதமாக செயல்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதால்தான், குற்றவாளி உடனடியாக கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினார். அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கை எதிர்க்கட்சியினர் அரசியலாக்குவதாகவும் குற்றம் சாட்டினார். பா.ஜ.க. ஆட்சி நடைபெறும் மணிப்பூரில் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறை சம்பவங்கள் பற்றி எரியும் நிலையில், பிரதமர் மோடி மணிப்பூருக்குச் செல்லாதது ஏன் என்று கேள்வி எழுப்பினார்.

### தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த

# தியாகச் சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் - வீரமங்கை வேலுநாச்சியார் புகழ் வாழ்க!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.5-

தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த தியாகச் சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் - வீரமங்கை வேலுநாச்சியார் புகழ் வாழ்க என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**ஆதிக்கத்துக்கு அடிபணியும் பேச்சுக்கே இடமில்லை எனத் தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த தீரச்சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோரின் புகழ் வாழ்க.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.







தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் நகராட்சியின் ‘நமக்கு நாமே’ திட்டத்தின் கீழ் ரூ.36 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவுள்ள திருச்செந்தூர் பேருந்து நிலைய ஓடுதளம் மேம்பாட்டு பணிகளை மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் நகர மன்ற தலைவர் திருமதி சிவ ஆனந்தி,துணை நகர மன்றத் தலைவர் மற்றும் ஒன்றியச் செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகரச் செயலாளர் வாள் சுடலை,பில்லா ஜெகன், நகர மன்ற உறுப்பினர் ரேவதி கோமதிநாயகம் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பட்டி ஊராட்சியில் கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 26.12.2024 அன்று திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலவதி, ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மு.அய்யம்மாள் மற்றும் பலர் உள்ளனர்.

### நீடாமங்கலம் ஒன்றியம் - எடமேலையூர் ஊராட்சி அலுவலகத்தில்

# 22 ஊராட்சி மன்றங்களுக்கு 35 மின்கலன் மூலம் இயங்கும் வண்டிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது!

திருவாரூர், ஜன 5-

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூர் மேற்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 22 ஊராட்சி மன்றங்களுக்கு 35 எண்ணிக்கையிலான மின்கலன் மூலம் இயங்கும் வண்டிகள் வழங்கும் விழா தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது.






திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூர் மேற்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 22 ஊராட்சி மன்றங்களுக்கு 35 எண்ணிக்கையிலான மின்கலன் மூலம் இயங்கும் வண்டிகள் வழங்கும் விழா தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.தி. சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் கோ.பால சுப்ரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), செயலாக்கத்திட்டம் 2023-24ன் கீழ் திடக்கழிவு மேலாண்மையில் தன்னிறைவு பெறுவதற்காக கிராமப்புறங்களில் குப்பைகளை விரைந்து கொண்டு செல்ல ஏதுவாக மின்கலன் மூலம் இயங்கும் குப்பை வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூர் நடுத்தெரு ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.12 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் புதியதாக கட்டபட்ட நியாய விலைக்கடையினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, செட்டிச்சத்திரம் சோனாப்பேட்டை பெரியார் நகர் பகுதியில், விளையாட்டு மைதானம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ, உடனிருந்தார்.

இந்நிகழ்வில், மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் யோகேஸ்வரன், நீடாமங்கலம் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.விஜயலெட்சுமி, முத்துகுமரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரண்டாம் தளத்தில் மின் கசிவால் ஏற்பட்ட புகையினால் பாதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளை இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம்.எம்.எல்.ஏ. நகர்மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், ஒன்றியச் செயலாளர் முத்துக்குமார், உதயகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்தராஜுலு மற்றும் நகர மன்ற உறுப்பினர் காளிதாஸ் உட்பட மருத்துவமனை மருத்துவர்கள் பார்வையிட்டு ஆறுதல் கூறினர்.

